௨

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி ௧. } நள௵ புரட்டாசிமீ 1916௵ அக்டோபர்மீ { பகுதி ௯.

புதல்வர் கடமை.

(214-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இதுகாறும் கூறியவற்றால், மாறெதும் கூறுதும், முணுமுணுப்பின்றியும், மனப்பூர்வமாகவும், மாதிர் பிதிர் வாக்கிய பரிபாலனம் செய்து தீர வேண்டியது மக்கள் கடமைகளில் தலைசிறந்ததாகும் என்பது விளங்கும். இக்கடமையைச் செலுத்துவதில் மக்கள் கவனித்துணரவேண்டிய அதி முக்கிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது அங்ஙனம் கீழ்ப்படிதலுக்கும் ஒரு எல்லையுண்டு என்பதே: 'புரைதீர்ந்த நன்மை' பயக்கும் காரியங்களை மட்டும் சற்புத்திரர்கள் தந்நயம் கருதாமலும், தமக்குறும் கஷ்டநிஷ்டூரங்களைப் பாராட்டாமலும் செய்து முடிக்கவேண்டுமேயன்றி, பெற்றோர் வாக்கைப் பிரமாணமாகக் கொண்டு மீளாநரகுக்கு ஆளாக்குவிக்கும் எவ்வினைத் தொழிலையும் செய்ய ஒருபோதும் உடன்படலாகாது. உதாரணமாக, பெற்றோர்கள் தமக்குப் போதிய அறிவின்மையால்;

I "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

"*ஆன்முலை அறுத்த ¶ அறன்இல் லோர்க்கும்
X மாண்இழை மகளிர்க் கருச்சிதைத் தோர்க்கும்
§ பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்

பிராயச்சித்தம் உண்டு. ஆயினும் உலகமே மேல்கீழாயினும் ஒருவன் செய்த நன்றியை மறந்து அவனுக்குத் தீங்கிழைப்பவர்க்குப் பிராயச் சித்தமே கிடையாது."

*சிதைவகல் காதல் தாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவிஅந் தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம் §மாற்றலாம் ஆற்றல். ○மாயா
உதவிகொன் றார்க்கென் றேனும் ०ஒழிக்கலாம் உபாயம் உண்டோ?

என்ற மகா வாக்கியங்களை மறந்தோ, பொருட் படுத்தாமலோ, சுயநன்மை ஒன்றே கருதிச் செய்ந்நன்றி மறந்து தீயன புரியுமாறு தம் மக்களை வற்புறுத்தக் கூடும். அல்லது,

II "பத்தியால் உள்ளே பரிந்தரனைத் தாளேக்கில்
முத்திக்கு மூலம் அது" (ஆதலின்)

"பூசனை செய்து புகழ்ந்து மனங்கூர்ந்து
நேசத்தால் ஈசனைத் தேடு"

என்ற ஆன்றோர் வாக்கைச் செல்வச் செருக்கால் சிறிதும் பொருட் படுத்தாமல் அறிவிலாப் பெற்றோர் சிலர், தாம் ஈசுவர நிந்தனை செய்வதோடு நில்லாமல், பூர்வ ஜன்மப் புண்ணிய வசத்தினால் தெய்வ பக்தி வாய்ந்த தம் மக்களையும் மிக நிர்ப்பந்தித்துத் தெய்வ தூஷணை செய்யுமாறு ஏவக் கூடும்.

காடுற்ற ஸ்ரீராமன் விஷயத்தில் தான் முற்றிலும் நிரபராதி என்பதைக் கௌசலை நன்கறியுமாறு பரதன் ஆணையிட்டுக் கூறிய பலவற்றுள்,

---

*ஆன்முலை—பசுவின்மடி, ¶ அறன்இல்லோர் – பாபிகள், X மாண் இழைமகளிர்—நற்குணம் நிறைந்த கற்புடைய சுமங்கலிகள், § பார்ப்பார்த் தப்பிய—பிராமணர்க்குத் தவறு செய்த

*சிதைவுஅகல்—குற்றம் அற்ற; §மாற்றலாம் ஆற்றல் – பாபத்தைப் போக்கிக் கொள்ளக்கூடிய வன்மை, ○மாயா—அழியாத, ०ஒழிக்கலாம்—நிவர்த்தித்துக் கொள்ளக்கூடிய.

"நிந்தனை தேவரை நிகழ்த்தி னேன் புகும்
வெந்துயர் நரகினில் வீழ்க யானுமே"

என்பதும் ஒன்று. இஃதொன்றே தேவ தூஷணையால் விளையும் பயனை விளக்கப் போதியதன்றோ?

பின்னும் நிதான யோசனையின்றி, அவசரபுத்தியாலும் ஆத்திரப்பட்டும், அறிவு நிரம்பாதபெற்றோர்கள், தம் மக்கட்கு, கனவிலும் நினைக்கத் தகாத கொடுஞ்செயலாகிய பஞ்சமகா பாதகங்களில் ஏதேனும் ஒன்றைப் புரியக் கட்டளையிடக் கூடும்.

முற்கூறியவற்றைப் போன்ற பழிபாவங்கட் கேதுவாகிய காரியங்களைச் செய்ய, பெற்றோர் கட்டளையிடுவாராயின், இத்தகைய கட்டளைகட்குப் பிள்ளைகள் கீழ்ப்படிய வேண்டிய நிமித்தமே இல்லை. இவ்விஷயங்களில் கீழ்ப்படியாமையால் அவர்கட்குச் சித்திப்பது புகழும் புண்ணியமுமே ஆகும். இவ்வுண்மைகளைச் சில உதாரணங்களால் தனித்தனி விளக்குவோம்:

(1) குந்திதேவி தன் மகனாகிய கன்னனிடம், (ஸ்ரீகிருஷ்ணனது போதனைக் குட்பட்டு) பாரதயுத்தம் ஆரம்பிப்பதற்குச் சின்னாட்களுக்குமுன் சென்று, தான் அவனது தாயே என்பதை மெய்ப்பித்து, துரியோதனனுக்குத் துரோகஞ் செய்து பாண்டவர்கட்குச் சகாயமாக அவர்கள் கட்சியிற் சேரும்படி எவ்வளவோ வற்புறுத்தி வேண்டியும், "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்பதைக் கடைப்பிடித் தொழுகினனோ?

குந்தி. "வருகஎன் மதலாய்! இளைஞர்ஐ வரும்நின்
மலரடி அன்பினுல் வணங்கி
உரிமையால் மனம் ஒத்(து) ஏவலே புரிய
ஒருதனிச் செய்யகோல் ஓச்சி
அரசெலாம் வந்(து) உன் கடைத்தலை வணங்க
ஆண்மையும் செல்வமும் விளங்கக்
குருகுலாதிபர்க்கும் குரிசிலாய் வாழ்வு
கூர்வதே கடன்" எனக் குறிக்க,

கன்னன். "பெற்றநீர் மகவன் பிலாமையோ அன்றிப்
பெரும்பழி நாணியோ விடுத்தீர்.

அற்றை நாள் தொடங்கி என்னைஇன் றளவும்
ஆருயிர்த் துணைஎனக் கருதிக்
கொற்றமா மகுடம் புனைந்(து)அர சளித்துக்
கூட உண்(டு) உரியதம் பியரும்
சுற்றமா னவரும் என் அடி வணங்கத்
தோற்றமும் ஏற்றமும் அளித்தான்.

இன்னன் எனஅறியா என்னை முடிகவித்து
மன்னர் வணங்க அரசளித்துப்—பின்னையுமே
தன்எச்சில் தான்உண்ணுந் தன்மையான் என்அன்னாய்!
என்எச்சில் உண்டான் இனிது.

மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்இழுப்ப
அற்று விழுந்த அருமணிகள்—மற்றவற்றைக்
கோக்கோ பொறுக்குகோ என்றோனுக் கென்னுயிரைப்
போக்கேனோ வெஞ்சமரிற் புக்கு."

என்றல்லவோ கூறினன்? இங்ஙனம் குந்திக்கு அவன் எடுத்தும் மறுத்தும் கூறிய ஒவ்வொரு மொழியையும் பாராட்டிப் புகழா தார் யார்? நிற்க.

(2) செல்வம் வலிமை முதலியவற்றாற் செருக்குற்றுப் பகவானைத் துவேஷித்துப் பல பாவகாரியங்கள் புரிந்து வந்த இரணியன், தன்னை அறிந்த யாவரும் தன் னொருவனையே தெய்வமாக வணங்க வேண்டுமெனக் கண்டிப்பாகக் கட்டளை யிட்டிருந்தான். இங்ஙனம் யாவராலும் வணங்கப்பட்ட அவனுக்கு, சேற்றில் செங்கழுநீர் உதித்தது போன்றும், நத்தை வயிற்றில் முத்துத் தோன்றியது போன்றும், பிரகலாதன் என்ற ஓர் சற்புத்திரன் தோன்றினன். இச் சிறுவனுக்கு வித்யாப்யாஸம் செய்விக்கத் தொடங்குகையில், இரணியனது கட்டளைப்படி போதகாசிரியரான சுக்ராசாரி "இரணியாயநம:" என்று கற்பிக்க, சிறுவன் "நாராயணாய நம:" என்ன, இரணியன் நயத்தாலுமன்றிப் பயத்தாலும் அவனைத்தனது விருப்பிற்கும் கட்டளைக்கும் இணங்கச்செய்ய முடியாமற் போயிற்று இரணியன் கடுஞ் சினங் கொண்டு, "தொடர்ந்த மும்மல முருக்கி வெம் பவக்கடல் தொலையக், கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள் மேற் காதல்?" என்பதற்கும் மாறாகத் தன் மகனை என்னைக்

கொப்பரையில் தள்ளியும், கல்லொடு கட்டிக் கடலில் விடுத்தும், வாள் வேல் முதலியன கொண்டு குத்தியும், மாரண ஹோமம் புரிந்தும், அஷ்டதிக் கஜங்களை ஏவியும், அஷ்டமா நாகங்களை விட்டுக் கடிப்பித்தும்,பைக்குள் போட்டு இறுக்கிக் கட்டி சம்மட்டி கொண்டு அடிப்பித்தும், இன்னும் இவைபோன்ற அகோர கிருத்தியங்கள் செய்தும் அவனைக் கொல்ல முயன்றான். ஆயினும் ஏதும் பயன்படாமற்போகவே,இரணியன் முன்னினும் சினந்து,மகனை நோக்கி "அடா துரோகி! நீ சொல்லும் நாராயணன் யாங்குளன்?" எனவே, "தந்தாய்! அப்பரமன் அகண்டிதன். இன்ன இடந்தான் இருப்பான் என எவராலும் கூற இயலாது. ஆயினும் ஒருவாறு சொல்லுகிறேன்.

> "சாணினும் உளன். ஓர் தன்மை அணுவினைச சதகூறிட்ட
> கோணினும் உளன்.மா மேருக் குன்றினும் உளன். இந்நின்ற
> தூணினும் உளன்.நீ சொன்ன சொல்லினும் உளன். இத்தன்மை
> காணுதி விரைவில்" என்று கனகன்சேய் கூறலுற்றான்.

இங்ஙனம் கூறிய பிரகலாதனை இரணியன் நோக்கி,

> "உம்பர்க்கும் உனக்கும் ஒத்(து) இவ் உலகெங்கும் உளனை இந்தக்
> கம்பத்தின் வழியே காணக் காட்டுதி. காட்டாயாயின்
> கும்பத்தின் கரியைக் கோள்மா கொன்றென, நின்னைக் கொன்றுன்
> செம்(பு)ஒத்த குருதி தேக்கி உடலையும் தின்பேன் என்றான்"

இத்தீர்மானத்தைக் கேள்வியுற்ற பிரம ஞானியாகிய சிறுவன் "எந்தாய்! என்வீண் சபதம்? என்னை எத்தனையோ விதத்திற் கொல்லப் பார்த்தீரே. உம்மால் முடிந்ததோ? எனது உயிர் உம்மால் கொல்லப்படுதற்கு அத்தனை எளிதானதன்று. யான் கூறிய பரமன் நீர் தொட்ட தொட்ட இடம் தோறும் தோன்றவே செய்வன். தோன்றானாயின் என்உயிரை யானே மாய்ப்பேன். மாய்க்கேனாயின் அப்பரமனுக்கு யான் அடியன் அல்லேன் என்பதை உறுதியாக நம்புக" என்னலும், இரணியன் கோபத்தால் முகம் பொங்கி "இத்தூணில் அவன் உளனாயின் என் எதிரில் வரட்டும்" என அத்தூணை உதைப்ப, திருமால் பக்தன் சொல்லை மெய்ப்பிக்க நர-சிங்க வடிவுடன் அத்தூணிற் றோன்றி அவனது உயிரை மாய்த்தனர் என்று கேட்கப் படுகிறதன்றோ? தந்தைக்குக் கீழ்ப்படியா

திருந்த தோடு கூட அவனுடைய மாணத்திற்கே காரணனுகி நின்ற இம்மகனுக்கு நரகப் பிராப்தி சம்புவித்ததோ? அல்லது அவனுடைய பெருமையாவது அற்பமேனும் குறைந்ததோ?

> "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்பது பொய்யில் புலவர் வாக்கன்றோ? இவை நிற்க.

(3) கல்வியும், கல்விக்கேற்ற அறிவும், அவ்வறிவுக் கேற்ற ஒழுக்கமும் கூடியவர் மேதை என்பார். இம்மேதை சீர்க்காரி என்ற முனிவரது புத்திரர். இச் சீர்க்காரிக்குத் திடீரெனத் தம் மனைவி மீது பிரமாத கோபம் வந்து விட்டது. ஜமதக்கினி ரேணுகையை வெட்டுமாறு பரசுராமனுக்கு ஆக்ஞாபித்தது போல், இவரும் தமது மனையாளைக் கொல்ல, அருமைக் குமாரருக்குக் கட்டளையிட்டு 'நான் நீராடித் திரும்பி வருவதற்குள் காரியம் நிறைவேறியிருக்க வேண்டும்' எனக் கண்டித்துக் கூறிச் சென்றனர். "தந்தை சொல்லைக் கடத்தலும் தவறு, தாய்க்கொலை புரிதலும் பாவம். இத்தரும சங்கடத்திற் கென் செய்வோம்" எனப் பன்னாழிகை தவித்து, இன்னது செய்கிறது எனத் தோன்றாமல் தியங்கிக் கடையில் "தாய் நிரபராதி என்பதை அவசரபுத்தியுள்ள என்தந்தை அறிவராயின் கழிவிரக்கமே கொள்வர். கோபம் பாவம், சண்டாளம். ஆகவின் தந்தை கட்டளையை நிறைவேற்றாதிருப்பதே தர்ம நியாயம்" எனத் துணிந்து, தந்தையின் அறியாமைக்கு விசனித்து நின்றார். இரண்டொரு நாழிகைக்கெல்லாம் சீர்க்காரி ஆசிரமத்தை நோக்கித் திரும்பி வருங்காலையில், கழிவிரக்கமே கொண்டவராய், "ஐயோ! என் வாழ்க்கைத் துணைவியை மகன் வெட்டி விட்டானே? ஆ! தெய்வமே! அவளைக் கண்ணுற் காண இனி எற்குக் கிட்டுமோ? நான் போய்ச் சேருகிற வரையில், பேரறிவாளனாகிய என் மகன் தாயை எக்காரணத்தேனும் வெட்டாமலிரானா! என்மேன்மைக் குமாரன் பிதிர் வாக்கிய பரிபாலனம் செய்பவனே யாயினும், நான் கோபத்திற் கூறினேன் என்று மறுஉத்திரவையும் பொறுத்து எதிர் பார்த்திரானா! நல்லறிவாளன் தாயைக் கொல்லவே துணியான். பரசுராமனைப் போல் பரபரப்புள்ளவன் அல்லன் எனது புத்திரன்.

"தூக்கி வினை செய்" என்ற விதியை நன்கு உணர்ந்தவன். ஆயினும்—என்விதி எப்படியாயிற்றோ!" என்று எண்ணுதும் எண்ணி மனம் புண்ணுகிப் பதறிக் கொண்டே கண்ணும கண்ணீருமாக வந்தனர். வந்தும் தம்மை எதிர் கொண்டுவந்து பணிந்த மனைவியையும் மகனையும் கண்டவுடன் அவர்க்கு இருந்த மன மகிழ்ச்சியைச் சொல்ல யாமோ திறமுடையேம்? உள்ளங் குளிர்ந்து, கண்ணீர் ஆறுகப் பெருக நின்று, அவர் பிள்ளையின் அறிவுடைமையை மெய்ச்சி ஆசீர்வதித்து, மனைவிக்கும் நன்மதிகூறி மகிழ்கூர்ந்து வாழ்ந்தனர். இதுகாறும் கூறிய வற்ருல்

> தன்னைஈன் ருேர்கள் வாக்கைத் தாங்குதல் கடன் என்ருலும்
> புன்னெறிக் குய்ப்பவாயின் போற்றிடா தொழிதல் மேன்மை:
> கன்னன், அக் கனகன் சேய், சீர்க் காரிசேய், தமது தந்தை
> அன்னைசொல் கடந்தும் யாண்டும் அழிவில்மெய்ப் புகழுற்ருரால்.

என்பது தெரிய வந்திருக்கும்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

அருள் மொழி.

1 அறிவும் அருளும் அன்பும் அடைக.
2 ஆண்டவன் ஆணையை ஆவலின் ஆற்றுக.
3 இயன்றதை இன்றே இன்புடன் இயற்றுக.
4 ஈகையால் ஈசன் இன்னருள் ஈட்டுக.
5 உளம் உரை உடலால் உறுதியே உணர்க.
6 ஊனுண வொழித்துநல் ஊதியம் பெறுக.
7 எதுவும் எதிரிலை என்றே எண்ணுக.
8 ஏழைமை ஏகிட ஏகனை ஏத்துக.
9 ஐயன் அருள்கொண்(டு) ஐம்புலன் அடக்குக.
10 ஒண்பொருள் ஒன்றே ஒல்கா(து) உன்னுக.
11 ஓதுவ தீதற ஓதிநன்(கு) ஒழுகுக.
12 ஔதா ரியனும் ஔவியம் அகற்றுக.

S. R. கங்கா ஜடேச சர்மா.

ஆத்திசூடி வெண்பா.

(194-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தாம்பெற்ற செல்வத் தருக்கைப் பிறர்காண
ஆம்பற்றால் ஐவர் அமைத்தநகர்—பாம்பிற்
கொடியரசன் கோளிழைக்கக் கூடியதா யிற்றால்
உடையதுவி ளம்பே லுணர்

[(உரை) தாம்பெற்ற—தாங்கள் அடைந்த, செல்வத்தருக்கை—சம்பத்தின் பெருமிதத்தை, பிறர்காண—அயலார் கண்டு வியக்கும் வண்ணம், ஆம்பற்றால்—உண்டாகிய அவாவினால், ஐவர்—பாண்டவர்கள், அமைத்த நகர்—நிருமித்த இந்திரப் பிரஸ்த மென்னும் அழகிய பட்டினத்தின் சிறப்பே, பாம்பிற் கொடியரசன்—ஸர்ப்பக் கொடியையுடைய துரியோதனன் (கண்டு); கோளிழைக்க—பொறாமையினால் பெருங் கெடுதிகளைச் செய்ய, கூடியது ஆயிற்றால்—தக்கதாய் விட்டமையின், உடையது — உனக்குள்ள செல்வத்தின் அளவினை, விளம்பேல்—எவர்க்கும் வெளியிடக் கூடாதென்பதாக, உணர்—நீ தெரிந்து கொள்.

பாண்டவர்கள் இளமையி லிருந்தே தங்கள் தாயாதிகளாகிய துரியோதனாதியரால் பல முறைகள் பல தந்திரங்களால் கெடுதிகளையுற்றும், தெய்வானுகூலத்தால் அவ்வத்தருணங்களிலும் அவ்வாபத்துகளினின்றும் மீண்டனர். உரிய பருவம் வந்த பின்னரும் அரக்கு மாளிகையில் குடியேற்றப்பட்டு அனலில வெந்திறந்ததாக உலகோரும் பிறரும் கருதும் படி செய்த வஞ்சகக் கொடுஞ் செயலுக்கும் தப்பி, முன்னூற்றுமங்கலத்தில் பகாசுரனை வதைத்துத் திரௌபதியைத் திருமணமுடித்துத் தனிமையில் அரசாட்சி செய்யுந் தகுதிபெற்றபோது, தேவதச்சனால, மானிடர் கண்டு கொள்ள அரிதாய விநோதச் சூழ்ச்சிகள் வைத்தமைக்கப் பெற்ற புதுமையைத் தங்கள் நண்பர்களாகிய அரசர்களுடன் வன்பினனாகிய துரியோதனன் முதலானோரும் கண்டு வெட்கித்தலை குனியும்படி வருவித்துத் தமக்குண்டாகிய சீரும் சிறப்பும் வெளிப்படும்படிச் செய்கையினாற் காண்பித்துக் கொண்டதே, பிறகு இவர்களுக்கு மாறு வகையை விளைவிப்பதாகிய அரசசபையில் பட்டத்தரசியை ஏற்றித் துகிலுரியச் செய்தமை முதலான எல்லாக் கடுங் கேடுகட்கும் காரணமாகியதென்பது தேற்றம்.

தெய்வபலம், சரீரபலம், ஸத்தியபலம் புத்திபலம், வித்தைபலம் ஆகிய அனைத்தும் ஒருங்கே யமையப் பெற்று அவதாரபுருஷர்களாகத் தோன்றிய அப்பெருந் தகையாளர்க்கே தமது நிலைமையைப் புறங்காணப் புலப்படுத்தியது, இத்தகைக் கெடுதியைத் தந்த தென்னின், ஏனையோர் திறத்தில் என்னு மென்பது சொல்லாமலே விளங்கும்.

உடையது என்பதற்கு ஒருவர்க் காதரவாகிய பொருளையே குறித்த தன்றி வேறு குணங்களைக் குறித்ததன்று மென் றறியத்தகும்.

அன்றி, ஒருவர் தம்பால் உள்ள உத்தம குணங்களைத் தாமே பிறர்பால் வியந்து புகழாமை யென்பதும் பொருந்தும். அது தற்புகழ்ச்சியாக முடிவதோடு, தம் மதிப்பையும் கொளலை கொள்ளும் சத்துருவாகலின் என்க.

அசலாம்பிகையம்மாள்.

கமலாவதி.

அங்கம் - 2

காட்சி-5.

இடம்.—ஸ்ரீதரனுடைய அறை. காலம்.—இரவு.

[கொரேசேனன் தன்கரத்தில் சில ரோஜா மலர்களைப் பிடித்துக் கொண்டு, நாலா பக்கமும் பார்த்துக் கொண்டிருக்க, அவன் பக்கத்தில் வீரன் நின்று கொண்டிருக்கிறான்.]

கோ. அடே! வீரா! ஒரு புறமாக மறைந்து கொள்.

வீர. அப்படியே. செய்யுரேனுங்க.

[ஓர் புறமாக மறைந்து கொள்கிறான்.]

கோ. (தனக்குள்) நான் இங்கு வந்தசமயம் சரியான சமயந்தான். ஸ்ரீதரன் இன்னும் வரவில்லை. இந்த மயக்க மருந்தை இவ் விரோஜா மலர்களில் தடவி வைத்து விட்டு, ஒருபுறமாக நானும் மறைந்து கொள்கிறேன்.

[மறைந்து கொள்ளுகிறான் ஸ்ரீதரன் பிரவேசிக்கிறான்].

ஸ்ரீ. (அங்கும் மிங்கும் உலாவிக்கொண்டே) நான் காண்பது கனவோ? நான் முன் ஜன்மத்தில் ஏதேனும் நல்லதவம் செய்திருக்கவேண்டும். அப்படி யில்லாவிட்டால், பகைவராகிய விக்கிரமகேது, நான் கமலாவதியை மணம் புரிவதற்கிசைவாரா? தவிரவும், என் தநதையும் இவ்விஷயத்தில் மன மிசைந்து விட்டார். ஆஹா! நானே பாக்கியசாலி. இருந்தாலும், நான் கமலாவதியை மணம் புரியும் வரையில், அவளைப பாராமல் எப்படி யிருப்பேன்? சீ! இதென்ன, எனக்குப் பைத்தியம் பிடித்து விடும போலிருக்கின்றதே!

(சற்றுத் தாமதித்து) இல்லற மார்க்கத்தைப் பற்றி எனக்கும், ஜயகேசரிக்கும் தர்க்கம் உண்டாயிற்று முன்பு. அதில், ஜயகேசரி கடைசியாக "ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் அனுபவத்தில் தான் நன்றாய்த் தெரியும், நான் இப்பொழுது எடுத்துரைப்பதனால், ஒன்றும் புலப்படப்போகின்ற தில்லை" என்று சொன்னான். அவன் சொல்லியது உண்மையே, சந்தேகமே இல்லை.

[தன் விரலில் அணிந்திருக்கும் கமலாவதியின் கணையாழிக்கு, ஓர் முத்தமிட்டு]

ஆஹா! அவள் தன்விரலில் அணிந்திருந்த இக்கணையாழியை யாவது அடையப் பெற்றேனே!

கோ. (ஒருபுறமாகத் தனக்குள்) சரி தான், என் சந்தேகமெல்லாம் தீர்ந்தே விட்டது.

ஸ்ரீ. [மேஜையின் சமீபத்திற் சென்று இரண்டு மலர்களைக் கரத்தில் எடுத்து]

ஆஹா! என்ன அழகிய மலர்கள்! இம்மலர்களில் எத்தனை இதழ்கள் அடங்கியிருக்கின்றன! என் காதலி மாத்திரம் இப்பொழுது சமீபத்திலிருந்தால் அவளது அழகிய கூந்தலில் இவைகளை என் இருகையாலும் சூட்டி ஆனந்த மடைவேனே!

[அவைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டு, மோர்ந்தவுடன், மயக்கத்தினால் மஞ்சத்தில் சாய்கிறான்.]

கோ. (தனக்குள்) நான் மயக்க வஸ்துவை அம் மலர்களின் மீது அதிக மாகப் பூசியதால் தான், இவன் இவ்வளவு சீக்கிரம் மயக்கம் அடைந்தனன்.

[ஸ்ரீதரனருகிற் சென்று]

ஆம்! சரியான மயக்கம்.

[ஸ்ரீதரன் கரத்தி லணிந்திருந்த கணையாழியைக் கழற்றி]

"கமலாவதி" என்று இதோ வரைந்திருக்கின்றது இக் கணையாழியில். நல்லது! ஸ்ரீதர! நீ 'கமலாவதியை அடையலா' மென்று கொண்டுள்ள ஆசையை விட்டு விடு.

[ஓர் திக்கை நோக்கி]

அடே! வீரா!

வீர. [சமீபத்தில வந்து]

எஜமான்!

கோ. அடே! நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும். தவறினால் தெரியுமா?

[ஓர் நிருபம் வரைகிறான்.]

அடே! ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உன் மீது ஒருவரும் சந்தேகம் கொள்ள இடம் கொடுக்காதே. தெரியுமா?

வீர. இன்னமும் எனக்கு சொல்லணுங்களா? நான் ரொம்ப உசாரா இருந்து காரியத்தை முடிச்சுப் பிடுரேனுங்க. எஜமானுக்கு அதெப் பத்திக் கவலெ வேண்டாங்க.

கோ. உன் சாமர்த்தியத்தை நான் அறிவேன். இருந்தாலும், நீ அதிஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தெரியுமா?

[நிருபத்தையும் கணையாழியை யும் அவனிடத்தில் கொடுத்து]

தாமதம் செய்யாமல் சீக்கிரம் செல்.

வீர. அப்படியேங்க.

[போகிறான்.]

கோ. சரி, ஒரு காரியம் முடிந்தது. இருக்கட்டும், பார்த்துக் கொள்ளுகின்றேன். மோஹன ராணியோ நான் சொல்வதை யெல்லாம் நம்புவதுடன், என திஷ்டப்படி எதைச் செய்யச் சொன்னாலும் செய்வாள். எனக்கென்ன குறை? இனி நான் இங்கிருப்பது சரியல்ல. நான் இங்கு வந்தது ஸ்ரீதரன் அறியாமலிருக்க வேண்டும். அவன் மயக்கம் தெளிவதற்கு முன் நான் செல்ல வேண்டும்.

[ஓர் புறமாகச் செல்கிறான்.]

காட்சி முடிகின்றது.

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

உ

*டோரா.

உழவன் ஆல னுடன் ஒரு பண்ணையில்
உறைந்தனர் வில்லிய முமடோ ராவும்.
அவன்மகன்: வில்லியம். அவள்:சோ தரன்மகள்.
பன்முறை அவர்களைப் பார்த்(து),அவன், "தம்பதி
ஆக்குவேன் இவரை" யென் றடிக்கடி எண்ணுவன்.
சிறிய தந்தை சிந்தையில் நினைந்ததை
முற்றும் டோரா உற்றுணர்ந் தவளாய்
வில்லியம் மீது விருப்புக் கொண்டனள்.
எனினும், அந்த இளைஞனே, அவளுடன்
என்றும் இல்லினில் இருந்தகா ரணத்தால்
ஓரா திருந்தனன் டோரா வினையே.
இந்தச் செய்தி இருக்க, ஓர் நாள்,
ஆலன் மகனை அழைத்து, "மகனே!
காலம் கழித்துயான் கடிமணம் முடித்தேன்.
எனினும், இனிநான் இறந்திடும் முன்னர்,
எனது பேரன் என்னுடை மடியினில்
இருப்பதைக் காண விருப்புறு கின்றேன்:
நினக்கு மணஞ்செய நினைத்திருக் கின்றேன்.
ஆதலின், டோரா மீதுகண் பார் நீ.
அவளோ பார்வைக் கழகு வாய்ந்தவள்.
அவள்தன் வயதுக் கதிக மாகவே
செட்டாக் குடித்தனம் செய்கின் றவளே.
அவள்என் சோதரன் அருமைப் புதல்வி.
அவனும் நானும் அனறொருக் கால், கடும்
பேச்சுப் பேசிப் பிரிந்து போயினோம்.
அவன்இறந தானேர் அந்திய நாட்டினில்.
அவன்பொருட் டவன்மக ளாம்டோ ராவை,
வளர்த்தேன்; அவளைநின் மனைவியாக் கொள்ளுதி.

*இது டென்னிஸன்பிரபு இயற்றிய "Dora" என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு.

ஏனெனில், இம்மணத் தினைப்பல் லாண்டாய்
அல்லும் பகலு மாவிரும் பியுளேன்.
என்று கூறினன். எனினும், வில்லியம்
சுருக்க மாவிடை சொற்றனன்.: "முடியா
தென்றால் டோரா வினைமணந் திடவே.
என்னுயிர் போயினும் யான்டோ ராவை
மணமுடித் திடவே மாட்டேன்" என்றனன்.
முதியோன் கோபம் மூண்டவ னாகி,
மடக்கிய கையுடன், "மாட்டாய் பயலே!
இந்த விதம்சொல வந்ததா துணிவு!
என்கா லத்தில் எல்லாம், தந்தை
இட்டது சட்டமா இருந்தது. இப்போதும்
என்சொலும் அவ்வா றிருத்தல் வேண்டும்.
சொல்வது தெரிந்ததா வில்லியம்? இதனைப்
பற்றியோ சித்துப் பார்த்திட, உனக்குத்
தவணை ஓர் மாதம் தந்துளேன். அதற்குள்
எனது விருப்பிற் கிணங்க ஓர்விடை
யான்பெற வேண்டும். இல்லா விடிலோ,
என்னைப் படைத்த ஈசன்மேல் ஆணை
இங்கிருந் தோட்டம் எடுக்கவேண் டியவனே.
இதற்குப் பின்னர், என்றும்என் வீட்டு
வாயிலில் நினது சாயையும் வீழ்ந்திடக்
கூடாது.' என்னக் கூறினன். கூறலும்,
வெறிபிடித் தவனாய் விடையளித்(து) உதட்டைக்
கடித்துக் கொண்டுஅவ் விடத்தி னின்றும்
அகன்றனன் வில்லியம். அதன்பின், அவளை
பார்க்கப் பார்க்கப பகைத்தனன் மேன்மேல்,
அதுமுதல் கடுமையா அவளிடம் நடந்தான்.
ஆயினும், பொறுமை யாகவே டோரா
அவற்றைச் சகித்தனள். அதற்குப் பின்னர்,
அவன்ஓர் மாதம் ஆவதற் குள்ளே,
தனது தந்தை யினதகம் நீங்கி

வினைகளம் தன்னில் வேலைக் கமர்ந்து,
ஆசை பாதியும் ஆத்திரம் பாதியும்
கொண்டவ னாகி,ஓர் கூலிக் காரனின்
மகளாம் மேரி மாரிஸ் ஸின்பால்
நயமுற நடந்து,தன் வயமுறச் செய்து,பின்
அவளை மணந்தனன். அந்தச் சமயம்
மணமணி ஓசை கணீரென ஒலிக்கையில்
ஆலன் தன்னுடை அண்ணன் மகளைக்
கூவி, அருமைக் குழந்தாய்! நின்பால்
வாஞ்சை அதிகம் வைத்திருக் கின்றேன்.
என்றா லும்,நீ என்மக னாக
இருந்த பயலுடன் ஏதும் பேசினை
யாயினும், அல்லது, அவன்தன் மனைவியென்(று)
அழைப்பவ ளுடன்உரை யாடினை யாயினும்,
என்வீடு உன்வீ டினியா காது. யான்
இட்டது சட்டம்" என்று கூறினன்.
ஸாது, டோரா; ஆதலின் வர்க்குத்
தத்தம் செய்தனள். தன்மனத் திற்குள்
"ஆகாக் காரியம் ஆகும் இதுவெல்லாம்.
என்சிற் றப்பன தெண்ணம் மாறிடும்.'
என்றவள் எண்ணினள். சென்றன பன்னாள்.
வில்லியத் திற்கொரு செல்வன் தோன்றினன்.
உடனே இடுக்கண்வந் துற்ற தவற்கு.
நொந்த மனத்துடன், தந்தையின் வாசல்
வழியே சென்று வந்தனன் நாடொறும்.
வந்தும், அவனது தந்தையோ, அவனுக்
கெவ்வித உதவியும் இயற்றினன் இல்லை.
ஆனால் டோரா வோரா னாளும்
தன்னால் மீக்கத் தக்க சொற்பப்
பொருளைச் சேர்த்(து), அதை ஒருவரும் அறியா
வண்ணம் அனுப்பி வந்தனள். அவர்களும்
அனுப்பியோர் யாவரென்று அறிந்தனர் இல்லை.

கடைசியில், வில்லியம் காய்ச்சல் கண்டு
கதிர் அறு • வடை செயும் காலத் திறந்தனன்.
இறக்கவே, மேரியின் இருப்பிடம் டோரா
சென்றனள். மேரி தன் செல்வனைப் பார்த்துக்
கண்ணீர் வடித்துட் கார்ந்துகொண் டிருந்தனள்.
டோரா வின்மேல் பூரா அவட்கு
நல்ல எண்ணமே இல்லை. டோரா
வந்ததும், "சிறிய தந்தையின் கட்டளைக்
கிதுவரை கீழ்ப்படிந் திருந்திட் டேன்யான்.
நானோர் பாவி. ஏனெனில், என்னு
லன்றோ, அந்தோ! ஆதி முதலில்
வில்லியத் திற்கிப் பொல்லாங் குற்றது.
எனினும், மேரி! இறந்தவன் பொருட்டும்
காத லுடனவன் கடிமணம் புரிந்த
அரிவையாம் நின்பொருட் டாகவும், இந்த
அநாதைக் குழந்தைக்காகவும், நின்பால்
வந்திருக் கின்றேன். இந்தநூ றாண்டுக
ளாகஇத் துணைநிறை அறுவடை இருந்த
தில்லை என்பதை இனிதறி வாயே!.
சிறுவனை எடுத்துச் சொல்லுகின் றேன். இக்
குழந்தையைக் கோதுமைக் குவியலுக் கிடையில்
சிற்றப் பன்கண் ணுற்றிட வைக்கிறேன்.
அவனுளம் பூரண அறுவடை நிமித்தம்
மகிழ்கையில், இந்த மதலையை ஒருக்கால்
காணவும் கூடும். கண்டதும், இறந்தவன்
பொருட்டதற் கின்னலம் புரிதலும் கூடும்."
என்றிவை கூறினள். பின்புடோ ராஅக்
குழந்தையை எடுத்துக் கொண்டு, கோதுமைக்
கிடையே சென்று,ஆங் கிருந்த வித்திடப்
பட்டி ராதஓர் திட்டிலுட் கார்ந்தனள்.
கசகசா பலஅதன் மிசைவளர்ந் திருந்தன.
தொலையில், அந்தப் புலமதில், உழவன்

நண்ணியும் அவளைக் கண்ணுற வில்லே.
அவன் ஆட் களினும், எவனுமே, டோரா
கான்முளே யோடும் காத்திருக் கின்ற
செய்தியை அவனிடம் செப்பத் துணிந்திலர்.
டோரா எழுந்து நேரா அவனிடம்
போயே இருப்பள். ஆயினும், பயத்தால் (130)
அங்ஙனம் செய்ய அவள்மனம் எழவிலை.
கதிர் அறுப் பவர்கள் கதிர் அறுத் தார்கள்.
வெயிலோன் குடதிசை வீழ்ந்தனன். விழலும்,
இருநில மெங்கும் இருளாய் இருந்தது.

(இன்னும் வரும்.)

ம. கோபாலகிருஷ்ணையர்.

விநோதக் கூற்று.

மைசூர்சென்ற மூடன் ஒருவன் சில துஷ்டர்களால் ஏதோ காரணத்தால் வலக் காது அறுபட்டான். இக் காதை வெளிக்காட்ட வெட்கி அவன்பெரிய தலைப்பாகையால் வெகு காலம் மூடி வந்தான். ஒரு நாள் ஒட்டன் ஒருவன் இரண்டு காதும் கத்தரிக்கபட்ட நாய் ஒன்றைப்பிடித்துச் செல்வதை இம் மூடன் கண்டான். கண்டதும் தன் அருகினிலிருந்த ஓர் நண்பனைநோக்கி,

மூடன்:— இந்த நாய் இந்த ஊரைத்தவிர வேறெங்ஙுருக்குப் போய் வந்திருக்கு? சொல் பார்ப்போம்.

நண்பன்:— இந்த எழவெல்லாம் ஆருக்குத் தெரியும்?

மூடன்:— நான் சொல்ரேன் ஜோஸ்யம். மைசூருக்குப் போய் வந்துருக்குன்னு.

நண்பன்:— நீதான் கண்டே

மூடன்:— (ஒட்டனை நாயுடன் ஓடி அழைத்து வந்து) அடே! நிஜத்தைச் சொல்டா இது மைஸூருக்குப் போய் வந்தது தானேடா?

ஒட்டன்:— இல்லீங்க ஸாமி!

மூடன்:— (வெகுண்டு) அடி செருப்பாலே, நான் சொல்ரேன் போய்ட்டு வந்தருக்குன்னு. பொய் சொல்ரியா? ஒருதரமில்லே ரெண்டுதரமாக்கும் போயிருக்கு. (இதற்குள் ஒரு பெருங் கூட்டம் கூடி விட்டது.)

நண்பன்:— நாய்க்காரனே இல்லேங்சானும். ரொம்பத் தெரிஞ்சவன் மாதிரி அட்டகாஸம் பண்றியே.

மூடன்:— அப்படியா சொன்னே? நானு பொய்யன்? இதோ ருஜுப் படுத்தரேன்பார். என்று சொல்லிக் கொண்டு (இது காறும் மூடி வைத்திருந்த அறுந்த காதைக்காட்டி) ஒருதரம் நான் போனேன் எனக்கு இந்த ஒரு காது அறுபட்டது. இதுக்கோ இரண்டுகாது அறுபட்டிருக்கு. ஆதலால் இரண்டு தரம் இது போயே யிருக்கணும்" என்றான். திருமதிச்சுதனுர்.

சாணக்ய சாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

(225–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

நந்தர்கள் வெள்ளிக் கிழமை மாலை ஜபசாலைவரும் விஷயத்தை வேகசர்மன் மூலம் க்ஷபணகன் சாணக்யனுக்கு அறிவித்தான். இது நிற்க. இந்துசர்மனது சிஷ்யனொருவன் சித்தார்த்தகன் என்ற பெயருடன் பாஹுராயணனை அடுத்து அரசாங்க ரஹஸ்யங்களை அறிந்து தனது ஆசிரியன் மூலமாகச் சாணக்யனுக்கு அறிவித்து வந்தனன் என்று சொல்லி யிருக்கின்றோமல்லவா? இவனிடம் குறித்தகாலத்தில் சில காரியங்களை முடிக்கும்படி சாணகயன் சொல்லியிருந்தான். அக்குறித்த காலம் வரவே, அவன் ராக்ஷஸனது மெய் காவலர்க்கு அதிகாரியும், தனது நண்பனுமான விநதனைக் கண்டு, "தக்க சமயத்தில் ராக்ஷஸனை யுத்தத்திற்குச செல்லாமல் தடுத்து விடு" என்று அவனிடம் ரகசியமாய் ஏதோ சொல்லி அவனிடமிருந்து சில ராஜரகசியங்களை அறிந்து கொண்டான். பிறகு பாகுராயணனிடம் வந்து, அவன் மனதைப் பேதிப்பதற்காவன கூறி, முடிவாக அவனை நோக்கி, "நான் சொல்வனயாவும் சந்திரகுப்தனே உனக்கு நேர் நின்று உரைப்பதாக நினை. உன்னால் ஆன சகாயம் புரிந்து, கீர்த்தியே பெற எண்ணங் கொண்டவனாயிரு. சாணக்யனது உபாய சாதுர்யங்களால், நீருக்கும் பாலுக்கும் வேற்றுமையும், யானைக்கும் சிங்கத்திற்கும் ஒற்றுமையும் உண்டாகு மாகில், அவன் பர்வதேசனை அழைத்து வந்ததும் ஆச்சர்யமோ? நான் ரகஸ்யத்தில் உனக்குக் கூறியன யாவும் உண்மை யென்பதற்கு இன்றிரவு இவ்விடத்திற்குச் சமீபத்தில் நடக்கும் யுத்தமே அடையாளம். நீ உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும், ஜயம் சாணக்ய சந்திரகுப்தர்களதே, உன் மனம் எப்படி"? என்று கேட்டான்.

பாகுராயணன் சந்திரகுப்தனுக்கு இயன்றவரை உதவி செய்வதாக வாக்களித்து, சித்தார்த்தகனுககு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, தனது அந்தரங்க நண்பனை அழைத்து, சத்துருக்களின் மீது கவிந்து யுத்தம் செய்யாமலும், அவர்களைத் தடுக்காமலும் இருந்து அவர்கள் மேன்மேலும், செல்லுமாறு, ஜாடையாக விட்டு விடும் படிக்கும், பத்திரபடன் முதலியோருக்குச சொலலி யனுப்பினான். அவர்களும் அங்ஙனமே செய்ய, பர்வதேசனது சைனியம் அதிகச் சேதமின்றி கங்கா—சாயு சங்கமமும் தாண்டி பாடலீபுரத்தை முற்றுகை விடப் புறப்பட்டன. நிற்க.

பாகுராயணன் நகரைக் காக்கச் செய்த ஏற்பாடுகளை மேற்பார்க்கச் சென்ற ராக்ஷஸன், பல அரசர்களையும், வீரர்களையும் ஆங்காங்கு வலிமை மிக்க சேனைகளுடன் நிறுத்தி, நகரத்தை ஜாக்கிரதையாகப் பாதுகாக்கும்படி எச்சரித்து, நந்தர்கள் இருக்குமிடம் வந்தான். அப்பொழுது அஸ்தமன மாயிற்று. நந்தர்களும் ராக்ஷஸனும் காசிராஜனுக்குக் காரிய முடிப்பதில் உள்ள சாமர்த்தியத்தைப் பற்றி வியந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் இரத்தம் படிந்த வஸ்திரத்துடன் இருவர் ஓடி வந்து டிங்கராத பத்திரபடர் சமீபத்திலுள்ள சிற்றரசர் சேனைக்கும் சத்துருக்களின் சைன்யங்களுக்கும் எட்டுத்தரம் யுத்தம் நடந்த விஷயத்தையும் ருத்ரவர்மன் நந்தர்களின் கடாக்ஷத்திற்குப் பாத்திரனாகும்படி செய்த வீரச்செய்கைகளையும் கூறிச "சத்துருக்கள் சோண நதிக் கரை வந்து விட்டார்கள். ஆதலின் உடனே துணைப்படை அனுப்ப வேண்டும்" என்றார்கள்.

நந்தர்கள் திடுக்கிட்டார்கள். சிறிது நேரத்திற் கெல்லாம் வேறு இரு குதிரை வீரர்கள் ஓடிவந்து, 'சத்துருக்கள் சோண—பத்திரையிலிருக்கும் ஓடக்காரர்களைக் கொன்று, கரையேறி, கொடிநட்டு, வியூகம் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்றும், 'கண்டகீநதிதீரத்திலுள்ள நந்த சைனியம் அவர்களைக் குறுக்கிட்டு எதிர்த்தாலொழியப் பட்டணத்துக்குப் பெருந் தீங்கு வரும்" என்றும் தெரிவித்தார்கள். உடனே நந்தர்கள் சத்துருக்களை எதிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச செய்தனர்.

இங்ஙனம் செய்து கொண்டிருக்கும் போதே, வேறு இரண்டு தூதர்கள் வந்து, சத்துருக்கள் சரயூ நதியைத் தாண்டிப் பட்டணத்தை முற்றுகையிடும்படி வந்திறங்கியுள்ள விஷயத்தை அறிவித்தனர். உடனே ராக்ஷஸன் நந்தர்களிடம் விடைபெற்று, லக்ஷம் குதிரை வீரர்களுடன், அசுரர்கள் மீது யுத்தத்திற்குச செல்லும் குமாரககடவுளைப்போற் பகைவர் மீது செல்லலாயினன். செல்லும் போதே எச்சரிக்க வேண்டிய சேனை வீரர்களுக்கு அவர்கள் நிலைக்குத் தக்க வாறு கட்டளையிட்டு, சத்துருக்களின் தலை கொணர் வோருக்கு நூறு மோகரா வீதமும், ஆயுதம் கொணர் வோருக்கு நான்கு மோகரா வீதமும், யானைவீரரைக் கொல் வோருக்கு ஆயிரம் மோகரா வீதமும் அளித்து, உற்சாகப் படுத்தித் தானே வீச்சக்கு நாலைந்து தலைகளும், வெட்டுக்கு ஏழெட்டுக் குதிரைகளும், தடவைக்கு ஓரானையுமாக வெட்டி வீழ்த்தி, சத்துரு சைன்யத்தை ஓட்டினன்.

சத்துருக்கள் ஓடியதும் ராக்ஷஸன், காயமுற்ற தனது சைன்யத்தைப் பார்க்கும் பொருட்டு யுத்தகளத்தினின்றும் புறப்பட்டுப் பட்டணத்

துக்குள் நுழைந்தான். அவன் நுழைவதைக் கண்ட எதிரிகள் 'இதுவே சமய'மெனக் கும்பல் கூடி வந்து மதயானைகளின் கண்களைக்கட்டி அவைகளைத்துரத்தி அகழில் விழும்படி செய்து, அவ் வியானைகளாலேயே அகழைத் தூர்த்து, அவைகளை மிதித்துக் கொண்டுவந்து, ஏணிகள் உதவியால் லங்கர்எற்றிப் பிராகாரத்தின்மீது சென்று, தங்கள் கொடியை நட்டு ஜய பேரிகைகள் முழக்கினர்.

இம் முழக்கங்கேட்ட ராக்ஷஸன் தனது சேனைகளை அழைத்துக் கொண்டு மதிலேறி சத்துருக்களைக் கைவேறு, தலைவேறு, கால்வேறு, உடல்வேறாக்கி, அகோர யுத்தம் செய்தான். உயிருடன் மீந்த சத்ரு சைன்யம் அரைக் கணமும் அவனெதிரில் நிற்க மாட்டாமல் "ஆ இவன் அமாத்ய ராக்ஷஸன் அல்லன். பிரத்யக்ஷ ராக்ஷஸனே!" என்று சொல்லிக் கொண்டு புறங்காட்டி ஓடிற்று. பிறகு ராக்ஷஸன் நந்தர்களால் நன்கு உபசரிக்கப்பட்டு தன் விடுதி திரும்பி நந்தர்களுக்குத் துரோகம் செய்தவர்களைத் தக்கவாறு தண்டித்து, விசுவாசத்துடன் உழைத்தவர்களுக்கு வெகுமதி யளித்தான்.

மறுநாள் பர்வதேச சேனைக்கும் நந்த சைன்யத்திற்கும் சமயுத்தம் நடந்தது: அன்றைய யுத்தம் முடிந்ததும், ராக்ஷஸன் நந்தர்களிடம் வந்து கொண்டிருந்த பொழுது, ஒற்றர் இருவர் அவனைக் கும்பிட்டு தக்ஷிண திக்கிலிருந்து சேனைகள் நந்தர்களுக்குதவியாக நான்கு யோஜனை தூரத்தில் வந்து கொண்டிருக்கும் விஷயத்தையும் தசார்ண தூரசேன பதிகள் ராக்ஷஸன் விருப்பின்படி பர்வதேசனது ராஜ்யத்தை முற்றுகையிட்டு கொள்ளையடிக்கும் விஷயத்தையும் தெரிவித்தார்கள். இவ்விஷயங்களை ராக்ஷஸன் நந்தர்களுக் கறிவித்து அவர்களை நோக்கி "ராஜபுத்திரர்களே! இன்று நிகழ்ந்த போரில் இருபக்கத்திலும் சரி பாதி சைன்யம் மடிந்தது. சமயுத்தம் ஆகியும் எவ்வளவோ சாகஸம் செய்தும், சத்துருக்கள் தாங்கள் தங்கியுள்ள பாளையம் விட்டுப் பின்னுக்குச் செல்லவில்லை. இன்னமும் யுத்தத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகவே தெரிகிறது. அவ்விதம் ஆயின், ஜயம் யார் பங்காகுமோ அறியோம். ஆகையால் இனி, மேல் விழுந்து சண்டை யிடாமலும், யுத்தத்திற்கு யத்தனப்படாமலும், சமாதானம் பேசுவது போல் அவர்களுக்குக் காட்டிக் கொண்டிருந்து, நமக்கிதுவரை நஷ்டமான சேனைகளுக்கு நமது தக்ஷிண தேச சைனியங்கள் வந்து சேர்ந்ததும், யுத்தத்திற்கு ஆரம்பிப்போம். அப்பொழுது ஜயம் நிச்சயம் நமக்கே. நம்மால் அனுப்பப்பட்ட தசார்ண, தூரசேன, தேசமன்னர்கள் பர்வதேசனது ராஜ்யத்தின் மீது தண்டெடுத்துச் சென்றிருப்பதால், பர்வதேசனுக்கு மேல் பலம் தனது ராஜ்யத்தி

விருந்து வந்து உதவமுடியாது. நம்மால் சேனைகளுடன் அவன் நாச மடைவது நிச்சயம். நாம் சற்றுக் காலதாமதஞ் செய்வதற்குள் காசி ராஜனும் நாம் சொல்லி அனுப்பியபடி காரியத்தை முடித்து விட்டால் நமக்கு யுத்தஞ்செய்வதே லாபமாகிவிடும். இவவிதம் செய்து நமது காரியத்தை அனுகூலப்படுத்திக் கொள்ள வேண்டு மல்லாது, அவசரப்படுதல் கூடாது" என்று சொல்லி, அவர்களுடைய சம்மதிபெற்று விஷ்ணுதாஸன் என்ற நியோகியை அழைத்து, அவனிடம் ரகஸ்யத்தில் ராஜகாரியதந்திரத்தைத் தெரிவித்து, மற்றும் அவன் செய்யவேண்டிய காரியங்களையும் சொல்லி அவனைப் பர்வதேசனிடம் அனுப்பினான்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்

சிறுவர்க்காகும் கதைப்பூங் கொத்து.

(234–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—7.

பொய்யன் மெய்யே பேசினும் அதனைஎவரும் நம்பார்கள்.

வியாக்கிரபுரம் என்ற புலியூரில் விஷ்ணுகுப்தனென்ற ஓர் பிராமணனிருந்தான். அவனுக்குக் கோபாலனென்ற ஒரு குமாரனுண்டு. தந்தையும், மகனும், ஒருசமயம் உத்ஸவம் பார்க்கக் காஞ்சிபுரம் சென்றனர். வழியில் ஒரு காட்டைக் கடக்க நேரிட்டது. வெகுதூரம் நடந்த சிரமத்தால் கோபாலன் மெள்ள நடந்தான். தகப்பனோ வேகமாக நடந்தான். அச்சமயம் மகன் சுத்த விளையாட்டுத் தனத்திற்காக "அப்பா! புலிவருகிறது! புலிவருகிறது" எனக் கூவினான். உடனே விஷ்ணுகுப்தன் பயத்துடன் திரும்பிப் பார்த்தான். புலியைக் காணவில்லை, கேலி செய்கிறானென்று கண்டு மறுபடியும் வேகமாக நடந்தான். அவன் கொஞ்சதூரம் சென்றதும் நிஜமாகவே புலி ஒன்று வந்து விட்டது. கோபாலன் பயந்து "புலி! புலி!" எனக் கதறினான். விஷ்ணுகுப்தனோ அவன் பொய் சொல்லுகிறான் என்றெண்ணித் திரும்பிப்பாராமலே நடந்தான். புலியோ வேகமாய் வந்து கோபாலனைத் தூக்கிக் கொண்டு காட்டிற்குள் நுழைந்து அவனைத் தின்று விட்டது.

விளையாட்டிற் கும்பொய் விளம்பற்க சாவும்
விளையும் இதனால் மிக.

கதை—8.

சிறுவர்களுக்குத் துஷ்டத்தனமாகாது.

ஓர் ஊரில் 12 வயதுள்ள கோவிந்தன் என்னும் சிறுவன் இருந்தான். அவன் நீராட நதிக்குப் புறப்பட்டுப் போனன். போகும் வழியில் ஒருபாம்பைக் கண்டான். அப்பாம்பு இவனைக் கண்டதும் ஓட ஆரம்பித்தது. அப்பொழுது தைரிய சாலியும் குறும்பனுமான கோவிந்தன் அதன்மேல் கல்லை வீசி எறிந்தான். தற்செயலாய் பாம்பு அதற்குத் தப்பி, மிகுதியும் பயங்கொண்டு ஓடிற்று. கோவிந்தன் மறுபடியும் ஒரு கல்லை எடுத்து அதன்மேல் எறிந்தான். அதுபாம்பின் மேல்பட்டு அதற்கு மிகுந்த கோபத்தை யுண்டாக்கிற்று. ஒருவன் பலமில்லாதவனுயிருந்த போதிலும அளவுக்கு மீறித் தன்னைத் தொந்திரவு செய்யும்பொழுது அவனுக்குக் கோபம் உண்டாகிப் பலிஷ்டனை எதிர்ப்பது சகஜமல்லவா? அம்மாதிரியே பாம்பிற்கும் கோபமுண்டாகி கோவிந்தனை எதிர்த்துக் கடித்தது. கடித்தவுடன் கோவிந்தன் வீட்டிற்கு ஓடி, விஷவேகத்தினால் மூர்ச்சையாய் வீழ்ந்தான். அச்சமயம் தற்செயலாய் அங்கு மாந்திரீகன் ஒருவன் வந்தான். அவன் அவவீட்டாரது பிரார்த்தனைக் கிணங்கிக் கிழக்கு முகமாக உட்கார்ந்து கருட மந்திரத்தை ஜபித்தான். விஷவேகம் குறைந்தது. தேவகிருபையால் கோவிந்தன் சுகப்பட்டான். ஒருவன் சமுத்திரத்திலேயே மூழ்கிய போதிலும், மலையிலிருந்தே விழுந்த போதிலும், தக்ஷகனே கடித்தபோதிலும் ஆயுர்ப்பல மிருந்தால் பிழைப்பது ஆச்சரிய மின்றே? ஆயினும் துடுக்கு எப்பொழுதும் ஆகாது.

கதை—9.

நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்.

பம்பாநதிக் கரையில் பெரிய இத்தி மரம் ஒன்று இருந்தது. ஒரு கால் மத்தியானத்தில் ஒரு காகமும் அனனமும் அதன் கிளையில் வந்து உட்கார்ந்தன. வழிப்போக்கன் ஒருவன் தன்னூருக்குத் திரும்பும் வழியிலுள்ள அம்மரத்தடியில் களைப்பால் படுத்துறங்கினன். இலைகளின் இடுக்கு வழியாய் சூரிய கிரணம் அவனது முகத்தில் விழுந்தது கண்டு அன்னபட்சி இரங்கித் தனது இரு சிறகுகளையும் விரித்து வெயிலை மறைத்து நிழல் தந்தது. வழிப்போக்கன் சுகமாகத் தூங்கினன். பிறர் சுகப்படுவதை ஸகியாத காகம் அவன் முகத்தில் எச்சமிட்டோடி விட்டது.

உடனே வழிப்போக்கன் எழுந்து மரத்தை அண்ணாந்து பார்த்தான். அங்கு அன்னபட்சியைக் கண்டு அதுதான் அப்படிச் செய்ததென நினைத்துக் கோபங் கொண்டு தன் கைத் தடியால், அவ்வுபகாரியை அபகாரியாக மதித்து, கொன்றான்.

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. (ஔவை)

(இன்னும் வரும்.)

வி. கு. நடராஜன்.

விடுகதை விஞ.

மூன்றெழுத்தினிலோர் சொல்லாம். முதலெழுத் தில்லா விட்டால்
என்றநல் அலையின் பெயராம். இடையெழுத் தில்லா விட்டால்
தோன்றுமோர் ஒலியின் பெயராம். சொல்கடை யில்லாவிட்டால்
ஊன்றுமோர் உறுப்பின் பெயராம். உரைமின்மற் றதுதான் யாதோ?

தில்லையாடி.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(231–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஆதப் புலைச்சிஎன அன்றறிந்தும் நும்தாயை
மாதவத்தோன் கொண்ட தென் கொல்? வள்ளுவரே!— ஈதடுக்கும்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்? (௪)

(அ-ம் முதலியன):—மாதவத்தோன் – யாளிதத்தன், ஈதுஅடுக்கும்– இது பொருந்தும், பெண்ணின்–மனையாளினும், பெருந்தக்க–உயர்வாகிய பொருள், திண்மை–உறுதி.

ஆதிப்புலைச்சி யென்று அன்றறிந்தும் மாதவத்தோன் அவளை மணந்தது:—பெருஞ்சாகரன்து புதல்வனுகிய பகவன் என்னும் ஓர் அந்தணோத்தமன், காசி யாத்திரையின் பொருட்டுப் புறப்பட்டுச் செல்கையில், மேலூர் அகரத்தில் தங்க நேர்ந்தது. அவ்விடம் ஓர் பெண்வர அவள் புலைசியாக இருந்தமை கண்டு சட்டுவத்தால் தலையில் அடித்துத் தாத்திப் பிறகு தன் வழியே சென்றான். காசியிலிருந்து சிலவருஷங்களுக்குப்பின் அவன் திரும்பியபோது இதே சத்திரத்தில் பகவன் தங்கினன். அப்பொழுது ஒருபெண்ணைக் கண்டு மயல் கொண்டு, அவளை வளர்த்தவரிடம் சென்று அவளைத் தனக்கு மணம் செய்விக்கும்படி வேண்டினன். அவர்களும் மணஞ் செய்து கொடுக்க இயைந்தனர். கங்காஸ்நானத்தின் பொருட்டு அவள் மயிரை வகிர்ந்த காலத்தில், பகவன், அவள் தலையில் ஒருவடுக்கண்டு "இவள் ஆதியானவளே (முன்னையவளே) எங்ஙனமெனில் நாம் சில வருடங்களுக்கு முன்பு சட்டுவத்தால் அடித்த வடு இது. ஆதலால் அறியாமற் புலைச்சியை மணக்க இசைந்தது தவறு" என அங்கிருந்து எடுத்தனன் ஓட்டம். உத்தமியாகிய அப்புலைசியும் அவனையே மணப்பதாக உறுதி செய்து கொண்டு அவன் செல்லுமிடந்தோறும் அவனைப்பின் தொடர்ந்து சென்றாள். அவளுடைய மனஉறுதியை வியந்து பகவன், சில நிபந்தனைகள் ஏற்படுத்தி அவளை மணஞ்செய்து கொண்டனன். இதுவே உறையூர்ப் பெரும்பறையன் வீட்டிலும் பிறகு நீதிஐயன் வீட்டிலும் வளர்ந்த ஆதியைப் பகவன் மனைவியாகக் கொண்டகதை. யாளிதத்தன் என்பவன் இப்புலைச்சியை மணந்ததாக ஞானமிர்தத்தால் தெரிய வருகிறது. பகவன் என்பது யாளிதத்தனது மறுபெயர் போலும்.

> முன்னான ரூமைமழை மூவர் தடுப்பவும்நா
> வன்மையாற் பெய்வித்தாள் வள்ளுவரே!—உன்னியே
> தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை (௫)

(அ-ம் முதலியன்):—மூவர்-சிவன் விஷ்ணு பிரமன், நாவன்மை-சொல் வலிமை, உன்னி-நினைந்து, தெய்வம்-பிறதெய்வத்தை, தொழாஅள்-வணங்காளாகி, தொழுநன்-கணவனை,

அநசூயை மூவர் தடுப்பவும் மழைபெய்வித்தது:—தன்னைசசோதிக்க வந்த திரிமூர்த்திகளையும் தனது கற்புவலியால் சின்னஞ் சிறு குழந்தைகளாக்கிய இவ்வுத்தமி, ஐம்பத்து நான்கு வருஷம் மழையின்றிப் பிராணிகள் வருந்தியகாலையில், தனது புருஷனான அத்திரியின் ஆக்ஞையினால்

கங்கை கொண்டுவேர்தது மின்றி, அம்மூவர் தமக்கவும், மகிதலம் முழுதும் மழைவளம் பெறச் செய்தனள் என்ற விஷயமே இங்குக் குறித்ததாகும்.

அங்கத் துடன்சோ(று) அருந்தியநா ளாயணிதன்
மங்கலநா ணும்காத்தாள் வள்ளுவரே!— மங்காது
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (௯)

(அ-ம் முதலியன்):— அங்கத்துடன்-(தன் கணவனும், தொழுநோயினனுமான மௌத்கல்ய ரிஷியின்) ஊனும் நீரும் சேரும்படி; அருந்திய-உண்ட, மங்காது- கெடாமல், தற்காத்து-கற்பினின்று வழுவாமல் தன்னைக் காத்துக் கொண்டு, தற்கொண்டான்-தன்னைக் கணவனாகக் கொண்டவனையும்: பேணி-(உண்டி முதலியவற்றால் உரிய காலங்களில்) உபசரித்து; தகைசான்ற-தம் இருவரிடத்தும் நன்மை அமைந்த; சொல்-புகழை, காத்து-(நீங்காமல்) காப்பாற்றி; சோர்வு (முற்கூறிய நற்குணநற்செய்கைகளில் இம்மியும்) தளர்ச்சி, இலாள்-இல்லாதவளே, பெண்-மனைவியாவள்.

நாளாயணி தன் மங்கலநாணைக் காத்தது:—நளாயணன் என்ற ஓர் இருடியின் புத்திரியும் இந்திரசேனை என்ற இயற் பெயருடையவளுமான நாளாயணி என்பவள் கற்பினுக்கு அணிகலமாகக் கவின் பெற வாழ்ந்தவள். இவ்வுத்தமி கையுங்காலும் தேகமும் அழுகிச் சொட்டும் குஷ்டரோகியான மௌத்கல்யன் என்பானுக்கு மனைவியாயினள். (மௌத்கல்யன் தன் மனைவியைப் பரிசோதிக்கவே குஷ்டரோகிபோற் காட்டிக் கொண்டனன் என்கின்றனர் சிலர். கர்மவசத்தால் அவன் குஷ்டரோகியாகவே இருந்தான் என்கின்றனர் வேறுசிலர்.) உண்மை எதுவாயினும் ஆகுக. அவள் அவனது குஷ்டத்தின் நிமித்தம் அற்பமும் அவனிடம் அருவருப்புக் கொள்ளாமல், அதி அன்புடன் தனது நாயகனுக்குரிய பணிவிடைகளைக் குறைவறப் புரிந்து வந்தாள். இவ்வளவு அழுகுள்ள நாயகனை ஓர் கூடையில் வைத்து அவன் மனம் திருப்தியுறுமாறு தினந்தோறும் கணிகையரில்லிற்குக் கொண்டு போய் விட்டுத் தன் நாயகனது மகிழ்ச்சியைத் தனது மகிழ்ச்சியாகப் பாவித்து வந்தனள் என்றால் அவளது பதிவிரதம் எத்தன்மையது பாருங்கள்!. ஒருநாள் அவள் தன் நாயகனைத் தூக்கிக் கொண்டு வேசி வீடு செல்லும் போது, ஏக இருட்டாயிருந்ததால், அந்த மாகத் திருட்டுக் குற்றம் சாட்டப்பெற்றுக் கழுவேற்றப்பட்டிருந்த மாண்டவியர் சிரமிசை அவள் கூடையைமோதிக் கொண்டு செல்ல, எற்கனவே துடிதுடித்துக் கொண்டிருந்த அம்முனிவர் சினந்து, "சூர்யோ

தயத்திற்குள் மாங்கல்யம் இழப்பாய்''எனச சபித்தனர். இதுகேட்ட அவ்வுத்தமி சிறிதும் மனந்தளராது, ''பொழுதே விடியாதிருக்கக் கடவது'' எனச்சொல்லிச் சென்றனள். அவளது ஆக்ஞைப்படி பொழுது விடியாமலே போயிற்று. போகவே, யாவரும் வருந்தி, நாளாயணியை வேண்ட, அவள் ''மாண்டவ்யர் தம் சாபததை மாற்றினால், யானென் வார்த்தையை மீட்டுக்கொள்ளுகிறேன்''என, தேவர் முதலிய யாவரும் நாளாயணியின் தூய்மையைக் கூறி வேண்டினர். உடனே அவா இரங்கி ''தீர்க்க சுமங்கலி பவா'' என்று அவளை ஆசீர்வதித்துத் தம் சாபத்தை மாற்றலும், நாளாயணியும் பொழுது புலருமாறு கூறினள். யாவரும் மகிழ்ந்தனர். நாளாயணி சுமங்கலியாக வாழ்ந்தாள்'' என்பதே.

> மேன்மாடம் விட்டு வெளிச் சென் றிரவிலொரு
> மான்மாய ஓலை கண்டாள் வள்ளுவரே!—ஊன்மேற்
> சிறைகாக்கும் காப்(பு) எவன் செய்யும்? மகளிர்
> நிறைகாக்கும் காப்பே தலை. (எ)

(அ—ம் முதலியன):—மான்—மான் போன்ற பெண்ஒருத்தி, ஊன்—சரீரம், சிறை—கட்டுக் காவலினால், காப்பு—காவல், எவன்—என்ன பயனை, நிறை—கற்பு, காக்கும்—(பெண்கள் தமமைத்தாமே) காத்துக் கொள்ளும், தலை—முதன்மையான காவலாகும்.

மேன்மாடம் விட்டு வெளிச் சென்று இரவில் ஒருமான் மாய்ந்தது:—அளகாபுரி அரசனது மகள் ஏலங்குழலாள், 12 வயதுக்குள்ளேயே நானு வித்தையும் கற்றவள். தனது அழகுக்கும் கல்விக்கும் தக்க நாயகனைத் தெரிந்து, விவாகம் செய்யுமாறு, புஷ்பவதியானதும் 12 நிலை உப்பரிகையில் பாதுகாப்புடன் அவள் வைக்கப்பட்டாள். ஒருநாள் பாடலீபுர ராஜனது குமாரன், சந்தனகுமாரன், எழுத்து வாசனை யற்றவன், அளகாபுரி வந்து சேர்ந்தான். அவன் அவ்வூரைச் சுற்றிப்பார்க்கையில் பூர்ண சந்திரன் உதய மானாற் போல் இருந்த ஏலங்குழலாளை உன்னத உப்பரிகைமீது கண்டான். அவளும் இவ் விராஜகுமாரனைக் கண்டாள். கண்டதும் இருவர்க்கும் காதல் எற்பட்டது. ஆயினும் அவர்கள் பேச முடியாத நிலையிலிருந்த படியால் அந்நங்கை தன் காதோலையை வாங்கி விரல் நகத்தால் அதில் ராஜகுமாரன் ஊருக்கு மேற்றிசையிலுள்ள சாவடியில் இரவில் வந்து தங்கியிருக்கும் படிக்கும், தான்அங்கு வருவதாகவும் எழுதி அதனை அவன் முன் னெறிந்தாள். அவன் அதை யெடுத்துத் தனக்குப் படிப்பில்லை யாதலால் தன் னெதிரில் வந்த குஷ்டரோகி ஒருவனிடம் கொடுத்துப் படிக்கச சொன்னான். குஷ்டரோகி ராஜகுமாரியைத் தான்

அனுபவிக்கக் கருதி, "இவ்வூரரசன் உம்மைப் பிடித்துக் கொல்லுமாறு கட்டளையிட்டிருக்கிறாராம். அவரது ஆட்கள் உம்மைத் தேடுகிறார்களாம். ராஜகுமாரத்தி நீர் உயிர்தப்பி ஓடவேண்டுமென்று எழுதியிருக்கிறாள்." என்னலும், சந்தனகுமாரன் பயந்து ஓடிப் போனான். பிறகு அக்குஷ்டரோகி தன்னை அலங்கரித்துக் கொண்டு, குறித்த விடஞ் சென்று, ராஜகுமாரிக்காகக் காத்திருந்து அவளைத் தீண்டியதும், அவள், தீண்டியவன் ராஜகுமாரன் அல்லனெனக் கண்டு, நிகழ்ந்த மோசத்தை யூகித்தறிந்து, ஏங்கிச் சீவனை விட்டாள்" என்பதே.

ஈண்டும் விசும்பும் இசைபாடக் கண்ணகிதான்
மாண்டவற்பெற் றும்பருற்றாள் வள்ளுவரே!—மாண்டவத்தாற்
பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. (அ)

(அ-ம் முதலியன்):— ஈண்டு – இவ்வுலகம், விசும்பு—தேவலோகம், இசை—கீர்த்தி, மாண்டவன்—இறந்த தன் கணவனாகிய கோவலனை, உம்பர்— விண்ணுலகு, மாண்தவத்தால்—சிறந்த தவத்தால், பெற்றான்— கொண்ட கணவனை, பெறின்—(பூசிக்கப்)பெற்றால், பெண்டிர்—மனைவியர், புத்தேளிர்—தேவர்.

கண்ணகி மாண்ட தன் கணவனைப் பெற்று உம்பர் உற்றது:—'கற்பின் தெய்வம்' என்றும், 'திருமாபத்தினி' யென்றும் 'பத்தினிக்கடவுள்' என்றும் இவைபோற் பிற மொழிகளாலும் சிறப்பித்துக் கூறப்படும் இப்பெண், காவிரிப்பூம் பட்டினத்துக் கோவலன் என்னும் வணிகனது மனைவி. இக் கோவலன் தன்னிடத்தில் அன்புமிக்க காமக்கிழத்தியாகிய மாதவிக்குத் தன் செல்வம் முழுவதையும் கொடுத்து வறியனாயினன். மானமிழந்து மதிகெட்ட இவன் உள்ளூரில் வசிக்க மனமின்றி, தன்மனைவியுடன் புறப்பட்டு வியாபார நிமித்தம் மதுராபுரி வந்து சேர்ந்தான். தன் மனைவியை ஓர் உத்தமியினிடத்தில் ஒப்புவித்து விட்டு, அவளது காற்சிலம் பொன்றை விற்கச் சென்றனன். இச்சிலம்பைப் பாண்டியன் மனைவியினது சிலம்பைக் களவாடிய பொற்கொல்லன் ஒருவன் கண்டு, உருவத்தில் இச்சிலம்பு அதற்கு ஒத்திருப்பதை நோக்கி மகிழ்ந்து, தன் மீது நின்ற பழி நீங்குமாறு, உடனே பாண்டியனிடம் சென்று அவன் புத்தியை மயக்கிக் கோவலனே திருடன் என அவனை நம்பும்படி செய்து, அவனைக் கொல்வித்தனன். இச் செய்தி கேட்ட கண்ணகி அரசன் பாற் சென்று, தன் வரலாறு கூறி, தனது மற்றொரு சிலம்பைக் கொண்டு, கோவலன் முற்றிலும் நிரபராதி என்பதை மெய்ப்பித்து, சோகாக்கினி

யால் மதுரையை அழித்து 15 நாளில் நாயகனே தன்னை எதிர் வந்தழைக்க அவனுடன் உம்பருலகு சென்றனள் என்று சிலப்பதிகாரக் கதையால் தெரிகின்றது.

விக்கிரமார்க்கற்குமுன்னோன் வேத்தியல்விட் டானில்லாள்
வக்கிரமார்க் கத்தன்னால் வள்ளுவரே!—தக்க
புகழ்புரிந்(த) இல் இல்லோர்க்(கு) இல்லை இகழ்வார் முன்
ஏறுபோற் பீடு நடை. (௬)

(அ-ம் முதலியன):— விக்கிரமார்க்கற்கு முன்னோன் - விக்கிரமாதித்தனது தமையன்: பர்த்ருஹரி, வேத்தியல்—அரசாளும் தன்மை, வக்கிரமார்க்கம்—தீநெறி, புரிந்த—விரும்பிய; இல்—மனைவி, ஏறு—ஆண் சிங்கம், பீடு—கம்பீரமான: பெருமிதமான்.

விக்கிரமார்க்கன் முன்னோன் இல்லாளின் வக்கிரமார்க்கத்தால் அரசாட்சியில் வெறுப்புற்றது:—உஜ்ஜயினி நகரத்தை அரசாண்டவனும், ஸம்ஸ்கிருத மகா கவியும், சுபாஷிதாத்ரிசதி முதலியவற்றின் ஆசிரியனுமான பர்த்ருஹரி என்னும் பக்தியிற் சிறந்த அரசனுக்கு, வைதிக பிராமணனொருவன், தனக்கு புவனேச்வரியால் அளிக்கப்பட்ட தெய்வீகக் கனியொன்றைத் தந்தருளினன். அதனை உண்போர் நரைதிரை மூப்புச்சாக்காடின்றி நெடுநாள் வாழ்வாராம். பர்த்ருஹரி அக் கனியை மகிழ்வுடன் பெற்றுத் தன் காதலிக்கு அளிப்ப, அவள் தனக்குப் பிரியமான குதிரைக்காரனுக்குக் கொடுத்தாள். அவன் அதை ஒருதாசிக்கும், அத்தாசி தன் இஷ்டனை ஒரு இடையனுக்கும், அவ்விடையன் தனது வைப்பாட்டியான சாணமெடுத்துப் பிழைக்கும் ஒருத்திக்கும் கொடுத்தனர். இக்கனியின் பெருமையை அறியாது சாணமெடுப்பவள் அதனைச் சாணத்தின் மேல் வைத்து, அரசனது அரண்மனைப் பக்கம் வர, பர்த்ருஹரி—உல்லாசமாய் உலாவ வந்தவன்—இதனைக் கண்டு, மனைவிக் களித்த மகிமை மிக்க இக்கனி மாட்டுச்சாணம் எடுப்பவள் கையில் எங்ஙனம் கிடைத்தது என்பதை அறிய அவளை விசாரித்தான். உள்ளது உள்ளபடியே விஷயம் வெளி வந்ததும், பர்த்ருஹரி,

"பெண்கள் அகக் காதலெல்லாம் பேசுமுயற் கொம்பே.
பெருங்கபடம் இடுகலனே பிறங்கும் அவர் உடலம்"

எனத் தேர்ந்து ஸம்ஸார விரக்தனாகித் தவநெறியிற் புகுந்தான்.

அங்கயற்கண் மாதால் அரனும், எழில் உக்கிரனால்
மங்கையும், மேன்மையுற்றார் வள்ளுவரே!—மங்காத

மங்கலம் என்ப மனைமாட்சி மற்(று) அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (ம)

(அ-ம் முதலியன):— அங்கயற்கண்மாது — மீனாக்ஷி தேவி, அரங்—சோமசுந்தரக்கடவுள், எழில்—அழகு, உக்கிரன்—உக்கிரபாண்டியன், மங்கை-மீனாக்ஷி, மங்கலம்—நன்மை, மனைமாட்சி—மனைவியின் நற்குண நற்செய்கைகள், அதன்—அம்மனைமாட்சியின், நன்கலம்—சிறந்த ஆபரணம், பேறு—பெறுதல்.

(இன்னும் வரும்.)

ம. கோ.

சமாசாரக் கொத்து.

அழகிய நல்லூர் செந்தமிழ்க் கலாசபை:—குட்டி லொட்டி என்ற அழகிய நல்லூரில் நடைபெற்று வரும் இசசங்க சம்பந்தமான சகல காரியங்களையும் மை ஊரில் உள்ள போர்ட் பாடசாலைக்கட்டிடத்தில், ஓய்வு நாட்களில் நடத்திக்கொள்ள இராமநாதபுரம் தாலுகா போர்ட் பிரஸிடெண்டவர்களும், அறுப்புக் கோட்டை சப்அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டரவர்களும் அனுமதி அளித்து விட்டார்கள்.

29—10—16ல் அப்பாடசாலைத் தலைவர் ஸ்ரீ கு. முத்துத் தேவரது அக்ராஸநத்தின் கீழ் இச்சங்கத்தின் விசேஷப் பெருங் கூட்டம் நடந்தேறியது: கடவுள் வாழ்த்துக் கூறி, கலைமகன் திருவுருவப் படத்திற்குச் சூட்டிப ஆராதனை செய்ததும் யாவரும் ஏகோபித்து, அச சங்கத்தாரே இயற்றிய அரசர் வாழ்த்துப் பாடினர்.

பிறகு, கட்டிடம் உதவப்பெருங் கருணைபுரிந்த தாலூகா போர்டு பிரஸிடெண்டுக்கும், ஸப் அஸிஸ்டண்ட் இன்ஸ்பெக்டரவர்களுக்கும், அதைத் தருமாறு அவர்களுக்குச் சிபார்சு செய்த "இசசங்க நிரந்தர அக்ராஸநாதிபதியாகிய 'மதுரை மாணவர் செந்தமிழ்ச சங்க'த் தலைவர் ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்களுக்கும், நன்றி கூறப் பட்டன. இஃதானதும், இதன் உப-அக்ராஸநாதிபதி ஸ்ரீ தி. அ. வேங்கடசாமி ரெட்டியார் சங்கம் ஒற்றுமையுடன் நடக்க வேண்டிய விஷயத்தைப்பற்றிக் கூறியதும், காரியதரிசி ஸ்ரீ நா. முத்துகாமாட்சியாபிள்ளை இப்பாடசாலைக் கட்டிடத்தில் முன்பு சங்கத்தை நடத்திவர முயன்றும் முடியாமற் போனமையையும், இப்பொழுது ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரது நன்முயற்சியினாலும் சிபார்சினாலும் அம்முயற்சி கைகூடி வந்ததையும் பற்றி நெடுநேரம் பேசியதும், வாராந்த அறிக்கை வாசித்தனர். இதன் பிறகு, சங்க நிர்வாகருள் ஒருவராகிய ஸ்ரீ சா. நா. சொக்கப்ப ரெட்டியார் என்னும் ஹரிதாசர், "அறஞ் செயல்" என்பதைப்பற்றி நன்கு உபந்யஸித்தனர். அங்கத்தினர் பலரும் அவ்விஷயத்தை எடுத்துப் பேசினர். கடைசியாக, அக்ராஸநர் பிரசங்க விஷயத்தை நன்கு விளக்கி முடிவுரை கூறவும் மங்கல வாழ்த்துக் கூறப்பட்டது. வந்த தமிழபிமானிகள் யாவர்க்கும் சந்தனம், சர்க்கரை தாம்பூலாதிகள் விநியோகிக்கப் பெற்றதும் சபை கலைந்தது.
—"கண்டு களித்தோன்"

பிரசங்கங்கள்:—தமிழபிமான மிக்க திருவையாறு டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப் ஸ்ரீ கே. எஸ். கோபாலரத்தினம் ஐயரது நன்முயற்சியினால் இம் மாதம் 19௳, "ஸ்ரீ சாரதா சன்மார்க்க சபை"யினது ஆதரவில், திருவை

யாற்றில் ஆற்றோரத்தில் உள்ள மண்டபத்தில் ஓர் விசேஷக் கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்தில், விவேகோதயம் பத்திராதிபர் ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையரவர்கள் "தமிழின்வளர்ச்சி" என்பதைப்பற்றி ஓர் மகோபக்யாசம் புரிந்தனர். மகா மகோபாத்தியாய பிரமஸ்ரீ சாமிநாதையரவர்களின் சீடராகிய ஸ்ரீ சந்தானம் ஐயங்கார் அசசமயம் முன்ஸீப்தாரின் வேண்டுகோட் கிணங்கி அக்கிராசனம் வகித்தனர்.

மறுநாள் மாலை அவ்வூரில் "கல்யாணமஹாலில்" கூடிய "ஸம்ஸ்கிருத கலாசாலை மாணவர் தமிழ்ச்சங்க"த்தில், ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அக்ராஸனம் வகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அப்பொழுது மாணவர் ஒருவர் "தூய்மை" என்பதைப் பற்றிப் பிரசங்கித்தனர். அன்று கூடிய பெருங் கூட்டத்தில் அநேக மாணவர்கள் அதி ஊக்கத்துடன் பேசியது மிக்க மகிழ்ச்சியை விளைவிக்கக் கூடியதாக இருந்தது. பின்பு அக்கிராசனர் சுமார் அரைமணி நேரம் மேற்றிசைப்பாக்களினின்றும் சரித்திரங்களினின்றும் பிரசங்க விஷய சம்பந்தமாகப் பேசினர். நிற்க.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில், ஆண்டிப்பட்டி ஜமீந்தார் ஸ்ரீ பெத்தாசசி செட்டியாரது நன்முயற்சியினால் கூட்டப் பெற்ற விசேஷக் கூட்டத்தில் எஞ்சினீர் ஸ்ரீ மாணிக்கநாயகர் 'தமிழ்நெடுங் கணக்கின் பெருமை' என்பதைப் பற்றி இராமநாதபுரம் ராஜா அவர்களின் அக்கிராஸநத்தின் கீழும் புதுக்கோட்டை ஸ்ரீ எஸ். இராதா கிருஷ்ணையர் பி. ஏ. யின் அக்கிராஸநத்தின் கீழும் சுமார் 3 மணி நேரம் ஓர் பிரசங்கம் செய்தனர். இப்பிரசங்க விஷயத்தைச சிலர் ஒப்பினரேனும் பலர் ஒப்பவில்லையென அறிகிறோம். இப்பிரசங்க விஷயம் "செந்தமிழ்" வாயிலாய்வரக் கூடுமெனச சொல்லிக் கொள்ளப்படுகிறது. இது உண்மையாயின், பிரசங்கவிஷயத்தைப் பற்றிய உண்மையையும் நன்கறியலாகும். சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட 16 வருஷங்களுக்கும், வருஷோத்ஸவப் பிரசங்கங்களைத் தவிர்த்து, இப்பொழுது நடைபெற்றதே மூன்றாவது பிரசங்கமாகும். இஃதொன்றே இராமநாதபுரம் ராஜா அக்ராஸ நாதிபத்தியம் ஏற்றதன் பின் நடைபெற்றதாகும்.

ஞாபகச் சின்ன நன்கொடை:— புரொபெஸர் ராமமூர்த்தியால் தஞ்சையில் இம்மாதம் 29உயன்று, காலஞ்சென்ற ஜீ. சுப்பிரமணிய ஐயர், வே. கிருஷ்ணசாமி ஐயர் ஆகிய இவர்களது ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பட இருக்கும் ஞாபகச்சின்னத்திற்குப் பொருளுதவி செய்ய ஓர் ஆட்டம் நிறைவேறியது. அதன் முடிவில் தஞ்சை வாசிகளின் பிரதிநிதியாக ஸ்ரீஎன். கே. ராமசாமி ஐயர், பி. ஏ. பி. எல். எழுந்து சுமார் முக்கால்மணி நேரம் இராமமூர்த்தியைப்பற்றி வியந்து கூறி அவ்வூர்ப் பரிசை அளித்தனர். அதன்பிறகு, திருவையாறு பிரமஸ்ரீ தி. ஜீ. சுப்பிரமணிய ஐயரது வேண்டு கோட்கிணங்கி, புரொபஸர் ராமமூர்த்திக்கு நன்கொடையளிப்பதற்காகவே மதுரையிலிருந்து வரவழைக்கப்பட்ட ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் எழுந்து, திருவையாறு ஜீ. சுப்பிரமணிய ஐயரது ஞாபகச் சின்னத்திற்காக நடைபெறும் அச்சபையில், தம் மூலமாக, திருவையாறு ஜீ. சுப்பிரமணியர், 60 ரூ பெறும் பொற் பதக்கம் தந்தமைக்குள்ள பொருத்தத்தையும், ராம மூர்த்திக்கு அது பெற உள்ள தகுதியையும், தனக்கு அது தர உள்ள உரிமையையும் எடுத்துக்கூறிப் பலர் கரகோஷம் செய்ய மெடல் அளித்தனர்.

நச்சினார்க்கினியர் தமிழ்ப்பரீக்ஷை.— இவ்வருஷம் நச்சினார்க்கினியர் ஞாபகச்சின்னத்தமிழ்ப் பரீக்ஷையில் 112 பேர்கள் தேறியுள்ளார்கள். இவர்களுள் கீழ்க்குறிக்கப்பட்டவர்கள் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெற அருகர். ஏனையோர் யோக்யதா பத்திரம் மட்டும் பெற அருகர்.

எட்டாவது (**Senior Intermediate**) வகுப்பு.

முதற் பரிசு:— அமெரிக்கன் கல்லூரி. நா. ஸ்ரீநிவாசன்.
இரண்டாம் பரிசு:—மதுரைக் கல்லூரி. நா. பைரவன்.

ஏழாவது (**Junior Intermediate**) வகுப்பு.

முதற் பரிசு:— மதுரைக் கல்லூரி. ரெ. செ. ரெங்கய்யங்கார்.
இரண்டாம் பரிசு:—ஷை டி. எஸ். ஸவாமி அய்யங்கார்.

ஆறுவது (**VI Form**) வகுப்பு.

முதற் பரிசு:— மதுரைக் கல்லூரி வி. கோ. சூ. நடராஜன்.
இரண்டாம் பரிசு:—பசுமலை உயர்தர கலாசாலை. கா. கணபதி.

ஐந்தாம் (**V Form**) வகுப்பு.

முதற் பரிசு.— மங்களபுரம் ஹைஸ்கூல் பெ. அமலாவதி.
இரண்டாம் பரிசு.—சேதுபதி உயர்தாகலாசாலை. பி.ராமச்சந்திரன்

நான்காவது (**IV Form**) வகுப்பு.

முதற் பரிசு:— பசுமலை உயர்தரகலாசாலை ஜே. வேதமுத்து.
இரண்டாம்பரிசு:—செயின்ட்மேரி உயர்தரகலாசாலை எம். சூசைப்பிரகாசம்

இச்சங்கத்து சண்முக வித்யாசாலை மாணவர்க்கு நடைபெற்ற தனித்தமிழ்ப் பரீக்ஷையிற் றேறியோர் நால்வர். அவர்களுள் மதுரைக் கல்லூரியில் ஆறுவது வகுப்பிற் பயிலும் வி. கோ. சூ. நடராஜன் முதற் பரிசும் சேதுபதி உயர்தர கலாசாலையில் வரைவுவகுப்பில் பயிலும் ரா. ஸ்ரீநிவாசவரதன் இரண்டாம் பரிசும் பெறத் தகுந்தவர்கள். —பத்திராதிபர்.

புத்தக மதிப்புரை.

வலிமைக்கு மார்க்கம்:—இது உத்தம தேசாபிமான ரத்தினமென உலகெலாம் கருதும் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது. ஜேம்ஸ் ஆலன் என்ற ஆங்கில வித்வான் எழுதிய (From Poverty to Power) என்பதின் தமிழ் மொழி பெயர்ப்பாகிய இது, யாவரும் எளிதில் படித்துணரத்தக்க விதமாக இனிய நடையில் பிள்ளையவர்களால் எழுதப்பட்டுள்ளது. அதிற் காணும் விஷயங்களும், பிள்ளையவர்களின் செய்யுள்களும் தமிழறிந்த எவராலும் படித்து ஆய்ந்து பயனுறத் தக்கவைகளே. விலைஅணாஎட்டே. வேண்டுவோர் சென்னையில் பிரம்பூரிலிருக்கும் ஸ்ரீமான் பிள்ளை யவர்களுக்கு எழுதிப் பெறுக. —பத்திராதிபர்.

குறைந்த சந்தா! ஆர்டருக்கு முந்துங்கள்!!

நவம்பர் மாதம் முதல் வெளிவரும்.

கற்பகம்.

இது தமிழ் பாஷையைப் பரவச் செய்து பொது ஜங்களின்
க்ஷேமத்திற்காக உழைக்கும்
ஓர் இனிய செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா தபால் சார்ஜ் உட்பட

உள் நாட்டிற்கு 0—12—0 வெளிநாட்டிற்கு 1—0—0

இதில் வித்யா விஷயம், கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்யம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், வேதாந்தம் இராஜாங்க விஷயம், ஜனங்க சீர்திருத்தம், இராஜ பக்தி, நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம் வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்கள் வித்வச்சிரோ மணிகளால் எழுதப்பட்டு வெளி வருவது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்றவரையில் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து நம் பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகின்றனம்.

N. B. பத்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு ஒரு வருஷப் பத்திரிகை இனாம்.

மானேஜர்,

"கற்பகம்." புதுவை.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நூல்கள்.

மனம்போல வாழ்வு:—இஃது இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக் கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு — இதில் அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பலஉபமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதிநூல்களின் காரணமெனத் தக்கது.

அகமே புறம்:—இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகக்கூறும் ஒரு சிறந்த நூல். இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:—இதில் எளிய நிலைமையை எய்தியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக் கொள்ளத்தக்க விதத்திலும் கூறப்பட்டுள்ளன. இதுவும் வெளிவந்து விட்டது.

ஒவ்வொன்றின் விலையும் அணா எட்டு. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,

பிரம்பூர், சென்னை.

பொருத்தமான ஔஷதம்.

அதிக மருந்துகளைப்பற்றி விசேஷ விளம்பரம் வரும் அல்லது வரா தென்பது கேள்வியல்ல. வரத்தான் செய்யும். அப்படி வருவதும காலத் துக்குப் பொருந்தி இருக்கிறது.

மெதுவாய்க் குணந்தரும் மருந்துகளை ஜனங்கள் வாங்கி உபயோகிப் பார்களா? அல்லது எவ்விதவியாதிக்கும் உடனே குணத்தையும் தேகபலத் தையும் கொடுக்கிற எங்கள் அற்புதமான

ஆதங்க நிக்ரஹ மாத்திரை.

களை உபயோகித்து நலம் பெறுவார்களா? வென்பதுதான் கேள்வி. இந்த ஆ. நி. மாத்திரைகள் மூத்திரேந்திரிய சம்பந்தமான மேக ரோகங்களை வேரோடுகளைந்து, மனதுக்கும் தேகத்துக்கு முள்ள பலஹீனத்தை நீக்கி, சுகமான ஜீரணசக்தியைக் கொடுக்கின்றன. அவைகள் ரதத்தை சுத்தி செய்து வீர்த்தியாக்கி நரம்புஸ்தானங் களை உறுதிப்படுததி, புத்தி தீக்ஷணியத்தைக் கொடுத்து, வீரியஸ்க லித ரோகங்களைக் குணப்படுத்துகின்றன. இவை தாம் பலத்தைக் கொடுக்கத் தக்க திவ்ய மருந்து.

மருந்துசெய் வதில் கெடுதி விளைவிக்கக்கூடியவைகள்
ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு விலை ரூ 1.

எங்கள் காமசாஸ்திரம் என்னும் புத்தகத்தில் சரீரசம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கேட்போருக்கு அதை இனு மாய்க் கொடுக்கிறோம.

அதை ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய அவசியம்.

ஒரு பெரிய வேலை.

எந்த உயர்ந்த உதத்தியோகத்திலிருந்தாலும கூலிவேலை செய்தாலும் தத்தம் தேகத்தைக் காப்பாற்றிக் கொள்வதுதான் முதல் வேலை யென்பதை யெல்லோருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
77, மேலக் கோபுரவீதி, மதுரை.

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ், திருமங்கலம்.